Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 02 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | கார்த்திகை 20 (06 12 1991) | வெள்ளிக்கிழமை | ஓசை 291

## சித்தியடைவது முக்கியமல்ல; பரீட்சைக்கு தோற்ற வேண்டும்

ஒன்பதாம் ஆண்டு மாணவர்கள் கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெறுவது கட்டாயமல்ல. சித்தியடையாவிட்டால் 10ஆம் வகுப்புக்கு மாற்றப்படமாட்டார்கள் என்பது தவறு. ஆனால் இப்பரீட்சைக்கு 9ஆம் ஆண்டு மாணவர்கள் கட்டாயம் தோற்ற வேண்டும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுனி தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பு வருமாறு: 9ஆம் ஆண்டிலுள்ள தமது பிள்ளைகள் இப்பரீட்சையில் சித்தியடையாவிட்டால் 10ஆம் ஆண்டுக்கு வகுப்பேற்றம் செய்யப்படமாட்டார்கள் என்று சில பெற்றோர்கள் அஞ்ச (4ஆம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குளம், அகத்திமுறிப்பு பகுதியில்

# புலிகள் - இராணுவம் கடும் மோதல்

# விமானப்படை அகோர குண்டுவீச்சு

மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. இம் மோதல்களின் போது சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் பெரும் எடுப்பிலான குண்டுவீச்சுத் தாக்குதலையும் மேற்கொண்டுள்ளன.

'ஒப்பரேசன் கிறீன் பெல்ட்' என்னும் இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா இராணுவம் கடந்த 27ஆம் திகதி ஆரம்பித்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அதன் ஒரு பகுதியாக சிலாபத்துறை இராணுவ முகாமில் இருந்து இரண்டாம் திகதி வெளியேறிய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில், அகத்தி முறிப்பு என்னும் இடத்தில் கடும் மோதல் மூண்டது. இம் மோதல் அடுத்த நாளும் நீடித்தது. இதில் இராணுவத் (4ஆம் பக்கம் பார்க்க)

## தடை செய்யப்பட்ட பொருள் மீதான தடை நீக்கம்

(கொழும்பு)

வவுனியா நகருக்குள் கொண்டு செல்வதற்கு தடை செய்யப்பட்டிருந்த அனைத்துப் பொருள்கள் மீதான தடைகளும் நேற்று முன்தினம் முதல் நீக்கப்பட்டுள்ளதாக வவுனியாவிலுள்ள சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கறியதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதே நேரம் வவுனியாவிலிருந்து தாண்டிக் குளத்திற்கு அப்பால் தடைசெய்யப்பட்ட எந்தப் பொருள்களையும் எடுத்துச் செல்வதற்கான தடை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வவுனியாவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையானவளவிற்கு பெற்றோல், மண்ணெண்ணை, போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## உ. அ. அதிபர் சியார்சு அவசியம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த அடையாள அட்டைகள் அற்ற க.பொ.த சாதாரணதர பரீட்சார்த்திகள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுடன் மட்டுமே தற்காலிக அடையாள அட்டைகளை தயார் செய்து கொள்ள வேண்டும் என்று யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்திருக்கிறது. (உ)

## தொண்டமான் சமரச முயற்சி அரசு நடுநிலைப் போக்கு

(கொழும்பு)

சமாதான முன் முயற்சிகளைப் பொறுத்த மட்டில் இலங்கை அரசு நடுநிலைப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக தொண்டமானை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

அச்செய்தியில் மேலும் ஜனவரி நடுப்பகுதிக்குள் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வந்து விடுமெனத் தொண்டமான் நம்பிக்கையோடு இருப்பதாகவும் கடந்த ஒரு மாதமாக விடுதலைப் புலிகளுடன் தொண்டமான் கடிதத் தொடர்பு கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சு.த. கட்சி பாராளும. குழுவை உடன் கூட்ட அனுரா கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்போது எழுந்துள்ள நெருக்கடி பற்றி விவாதிப்பதற்காக கட்சியின் பாராளுமன்றக் குழுவை உடனடியாகக் கூட்டுமாறு இக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுர பண்டாரநாயக்கா கேட்டுள்ளார் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி அநுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சியின் பிரதம கொறடா றிச்சர்ட் பத்திரணவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் அநுரா பண்டாரநாயக்காவை கட்சியின் பொதுச் செயலாளராக நியமிப்பதிலுள்ள நாமநிர்த்தனத்தை விட்டு கட்சியின் சிரேஷ்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## பொலிகண்டியில் குடியிருப்புக்கள்மீது விமானக் குண்டு வீச்சு

### இருவர் காயம்; வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டிப் பகுதியில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப்படையினர் குண்டுத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இக்குண்டுத் தாக்குதலில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்ததுடன் பல பொதுமக்களின் குடியிருப்புக்களும் பலத்த சேதமடைந்தன.

நேற்று அதிகாலை மேற்படி பகுதிக்கு விரைந்துவந்த இரு குண்டுவீச்சு விமானங்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பல தடவைகள் குண்டுகளை வீசின.

இத்தாக்குதலின்போது அன்னலட்சுமி தவேதாஸ், சு. சுப்பிரமணியம் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். இப்பகுதியில் இருந்த பல வீடுகள் பலத்த சேதமடைந்தன. (உ, ச)

## டிச.15 இல் ஐ.தே.க. 37வது மாநாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 37 வது வருடாந்த மாநாடு டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இதற்கான முன்னேற்பாடுகளை ஐ.தே.கவின் தலைமைப் பீடம் மேற்கொண்டு வருகிறது.

சுகததாச உள்ளரங்கில் இந்த மகாநாடு நடைபெறும்.

## மகாபொல நிதியிலிருந்து கஷ்டப்பிரதேச ஆசிரியருக்கு விசேட கொடுப்பனவுகள்

(கொழும்பு)

- லலித்

வசதி குறைந்த தூரப் பிரதேசங்களுக்குச் சென்று ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றைக் கற்பிக்க விரும்பும் ஆசிரியர்களுக்குச் சம்பளத்திற்கு மேலாக மகாபொல நிதியிலிருந்து விசேட கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும் என முன்னாள் கல்வி...

## அனுமதி அட்டைகள்

## இடம்பெயர்ந்த தீவக

## கொழும்பு உலக சந்தைப் பகுதியில் வெடி பொருள்களுடன் கார்

(கொழும்பு)

மற்றும் கைவேலைகள், திருமதி பவளம் சிவசுப்பிரமணியம் "வனிதா பாடசாலை" பூநாறி மரத்தடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (B/3588)

## அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பு சேர்ந்து அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், பாரிசவாதம், ஆஸ்மா, சயாலக்குத்து, சோர்வியாதிகள், நரம்பு தொடர்பான நாம்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. மேலதிக விபரங்களுக்கு 95, யாழ். வீதி, மானிப்பாய். 121/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். திருமதி சத்தியமூர்த்தி புகையிரத வீதி, கொக்குவில். (R/1985)

## புதியகட்சியில் 48,000உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி (டி.என்.டி.எவ்) என்ற தனது புதிய கட்சியில் இதுவரை சுமார் 48000 புதிய கட்சி உறுப்பினர்கள் சேர்ந்திருப்பதாக அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

### பட்டப்பின் கல்வி டிப்புளோமா 1991

பகுதி நேரக் கற்கை நெறிகள் பகுதி I, பகுதி II இற்கான விரிவுரைகள் 1992 ஜனவரி மாதம் 4 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

முழுநேரக்கற்கைநெறிக்கான விரிவுரைகள் 1992 ஜனவரி மாதம் 6 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட மாட்டா.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்

03-12-91

(B/3591)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம]

92 Dec. O/L,

ஆண்டு 6, 7, 8, 9, 10

புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்:- 09-12-91

மு. குறிப்பு:- O/L 92 DEC. DAY CLASS புதிய பிரிவுகள் ஆரம்பமாக இருப்பதால் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும். கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும். (B/3573)

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

## கிராமிய வங்கியின் அறிவித்தல்

மேற்படி கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்கு உள்ளவர்கள் 1989-05-31 இல் மீதியாக இருக்கும் தொகையைச் சரிபார்ப்பதற்காக தங்கள் சேமிப்புக் கைப்பேட்டுடன் 1991-12-18 ஆம் திகதிக்கு முன்னர் சனி, ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் காலை 9-00மணி முதல் மாலை 4-00மணிவரை சமூகமளித்து, உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கணக்காய்வாளர்,

கூட்டுறவுத் திணைக்களம்.

(B/3563)

# புதிய உயர்கல்லூரி

(New College Of High Studies)

ஆரியகுளம் சந்தி, - யாழ்ப்பாணம்.

**A/L 91 Day Classes**
**வினா - விடை வகுப்புக்கள்**

புதிய பிரிவு ஆரம்பம்: 09.12.1991

இந்து சமயம் [8 மணி] ]
இந்து நாகரிகம் [9 மணி] ] S. அருள்நங்கை

★ அளவையியல், புவியியல், அரசியல் வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

திருமதி S. அருள்நங்கை
- நிர்வாகி -

(B/3578)

பளை.

# கேள்வி அறிவித்தல் - 1992

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றினை 1992ம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1992ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு நடத்துவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 18-12-91 திகதி நண்பகல் 12.00 மணிவரை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை விசேட ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் விநியோகிக்கப்படுவதோடு, கேள்வி வைப்புப் பணம், கேள்விப் பத்திரப்பணம் ஆகியவற்றினைச் செலுத்தியதன் பேரில் 13-12-91 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இணைப்பின்றி விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை, பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்வி பத்திரம் பெறவிரும்புவோர் அடையாள அட்டையைக் காட்டிப்பெற்றுக் கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைவாக குத்தகையை எடுத்து நடாத்துதல் வேண்டும். நிபந்தனைகளைப் பகுதியாகவோ முழுமையாகவோ மீறுமிடத்து எதுவித நஷ்ட ஈடுமின்றி குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்குண்டு. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளிப்பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு பணம் | மதிப்பிட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | பளை பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 23000.00 |
| 2. | பளை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 35000.00 |
| 3. | பளை சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 1000.00 |
| 4. | புதுக்காட்டு சந்தி சந்தை | 100.00 | 250.00 | 1000.00 |
| 5. | இயக்கச்சி பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 6000.00 |
| 6. | இயக்கச்சி மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 2000.00 |
| 7. | இயக்கச்சி ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 500.00 |

செல்வி ஞா. அன்னமயில்
விசேட ஆணையாளர்
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை

பச்சிலைப்பள்ளிப்பிரதேசசபை
பிரதேச சபைப் பணிமனை
பளை, 04-12-1991

(B-3587)

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 12 - 06

1989ஆம் ஆண்டு இந்த தினத்தில் பழுகாமத்தில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் றொபேட்** [ சங்கரப்பிள்ளை கருணாகரன் - பட்டிக்கரை வீதி, காரைதீவு - 02 அம்பாறை ]
**கோஸ்ட்** [ கணபதிப்பிள்ளை - ஜான்டிருப்பு, கல்முனை. அம்பாறை ]
**வேணு** [ குஞ்சுத்தம்பி தவராஜன், - கொம்மாந்துறை, செங்கலடி, மட்டக்களப்பு ]
**சியாத்** [மீரா சாகிபு காலிதீன் - 552, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது. மட்டக்களப்பு]

பழுகாமத்தில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**யசோ** [ செல்லையா தங்கராசா - தம்பிலுவில் - 02, அம்பாறை ]

**அஸ்வர்** [ ஜுனர் ஜபீர் - அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு ]

1990ஆம் ஆண்டு மருதமுனைத்துறை நகரப் பகுதி மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட கரவெட்டியைச் சேர்ந்த பெண், மயிலிட்டியைச் சேர்ந்த இருவர் மற்றும் ஓர் ஆசிரியர் உட்பட 5 தமிழர்கள்.

சாவகச்சேரி சரசாலைப் பகுதி ப.நோ.கூ. சங்கத்தில் நிவாரணம் பெறுவதற்காக நின்ற மக்கள் கூட்டத்தின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட வயோதிபப் பெண்.

பலாலி முகாமிலிருந்து பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களின் போது கரும்பராயில் கொல்லப்பட்ட தாய், மகள்.

மட்டக்களப்பு, ஆரையம்பதிப் பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் பொதுமகன் 35ஆம் கிராமத்தில் மரம் வெட்டச் சென்ற போது சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள், கல்குடாப் பகுதிக்குச் செல்லும் வழியில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட கல்குடா மகாவித்தியாலய அதிபர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3579)

